සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## சைவநெறி - ශෛව ධර්මය

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

- மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. ஐந்து கரம் கொண்டு எம்மை அருள் பாலிக்கும் இறைவன்,
   1) முருகள் 2) கணபதி 3) உருத்திரன் 4) மதுரை வீரன்

2. சைவத் திருமுறைகளைத் தொகுப்பித்தவர்,
   1) 2ம் இராஜராஜ சோழன் 2) கஜபாகு மன்னன்
   3) 1ம் இராஜராஜ சோழன் 4) விக்கிரமசிங்கன்

3. 'திருமறைகளின் சிறப்புகள்' எனும் கூற்றிற்கு பொருத்தமாக அமையாதது,
   1) நோய் தீர்ப்பவை 2) பக்தி ஏற்படுத்துபவை
   3) உள்ளங்களை மாசுப்படுத்த வல்லவை 4) முக்திக்கு இட்டு செல்பவை

4. மங்கலப் பொருள்களுக்கு உதாரணமாக அமைவது,
   1) நிறைநாழி 2) இனிப்பு பண்டங்கள் 3) கத்தி 4) மரம்

5. சைவ வித்தியா விருத்திச் சங்கம் தோன்றுவதற்கு கருத்தாவாக இருந்தவர்,
   1) சேர் பொன்னம்பலம் 2) சேர் பொன் இராமநாதன்
   3) குமாரசாமி முதலியார் 4) சேர் அருணாசலம்

6. திரு தொண்டர்த்தொகையை பாடியவர்,
   1) சம்பந்தர் 2) திருமூலர் 3) சுந்தரர் 4) மணிவாசகர்

7. 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் அடிபரவுவோம்' இதில் சிறப்பிக்கப்படும் நாயனார்,
   1) தென்புகலி 2) மறைஞான சம்பந்தர் 3) மாணிக்கவாசகர் 4) சுந்தரர்

8. 'புலித் தோல் பியற்கிட்டு' எனக் குறிப்பிடப்படும் கடவுள்,
   1) சிவன் 2) முருகன் 3) பிள்ளையார் 4) வைரவர்

9. கிரியை தொண்டுகளாக அமைவது,
   1) சாமரை வீசுதல் 2) பிரார்த்தனை செய்தல்
   3) மந்திரம் உச்சரித்தல் 4) தீவர்த்தி பிடித்தல்

10. ஆண்கள் செய்யும் நமஸ்காரத்தில் அடங்கும் அங்கங்களின் எண்ணிக்கை,
    1) 9    2) 3    3) 10    4) 8

- **பொருத்தமான விடையைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

| பாலாவி, 12, ஈடேற்றம், 81, யானை |
|---|

11. ‘சுன்ன வெண் சந்தனச்சாந்தும்’ எனும் பதிகம் பாட ........................................ நாவுக்கரசரை வணங்கி நின்றது.

12. நாவுக்கரசர் ........................................ வயது வரை இவ்வுலகில் வாழ்ந்து முத்தியடைந்தார்.

13. மனிதன் ............................................. அடைய ஆலய வழிபாடு மிகவும் அவசியமாகின்றது.

14. திருமுறைகளின் எண்ணிக்கை ........................... ஆகும்.

15. ......................... எனும் தீர்த்தக்கரையிலே திருக்கேதீச்சரம் எனும் ஆலயம் அமைந்துள்ளது.

- **சரி, பிழை கூறுக.**

16. கற்றலின் பயன் கடவுளை வணங்குதல் ஆகும். (.....)

17. மணிமொழியார் என்று அழைக்கப்படுபவர் திருமூலர் ஆவார். (.....)

18. சிவனால் ‘அம்மையே’ என அழைக்கப்படுபவர் உமாதேவியார். (.....)

19. ‘போகி’ என்பது சந்திரனை குறிக்கின்றது. (.....)

20. அறிவின் தேவதை பிரகஸ்பதி. (.....)

## பகுதி II

- வழங்கப்பட்டுள்ள வினாக்களுள் முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடையளிக்குக.

1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டையும் பாடியவரையும் குறிப்பிடுக.
   1) ‘நத்தார் படை’
   2) ‘அம்மையே அப்பா’
   3) ‘அன்ன நடையார்’
   4) ‘குழலொலி யாழொலி’

(2x6 =12 புள்ளிகள்)

2. ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’
   1) சிவதரிசன பலனைத் தருபவர் யார்?
   2) சரியை, கிரியை தொண்டுகளுக்கு இவ்விரண்டு உதாரணங்கள் வீதம் தருக.
   3) ஆலய வழிபாட்டின் போது மேற்கொள்ளப்படும் நமஸ்காரங்கள் எத்தனை? அவை எவை?

(3x4 =12 புள்ளிகள்)

3. ‘மனித வாழ்வை நெறிப்படுத்துபவை விரதங்கள் ஆகும்.’
   1) விரதம் பற்றி நாவலர் கூற்றினை குறிப்பிடுக.
   2) விரதம் அனுஷ்டிப்பதால் ஏற்படும் நன்மைகள் 4 தருக.
   3) விரதத்திற்கும் பண்டிகைக்கும் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் 4 தருக.

(3x4 =12 புள்ளிகள்)

4. ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’
   1) நாவுக்கரசரின் அற்புதங்கள் 4 தருக.
   2) இவர் பாடிய முதல் பதிகம் எது?
   3) இவருடன் இணைந்து சமய, சமூகப் பணியாற்றிய நாயனார் யார்?
   4) அவர் கடைபிடித்த நெறி யாது?

(4+2+4+2=12)

5. ‘வாழ்க்கையின் வழிகாட்டிகள் திருமுறைகள்’
   1) திருமுறை என்றால் என்ன?
   2) அடங்கள் முறை என்பதால் நீர் விளங்குவது யாது?
   3) திருச்சிற்றப்பலம் கூறுவதன் காரணம் யாது?
   4) திருமுறை பாடல்களின் சிறப்புகள் 2 தருக.

(4+2+4+2=12)

6. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) சேர். பொன் இராமநாதன்
   2) விரதங்கள்
   3) மாணிக்கவாசகர்
   4) ஆலய வழிபாடு

(2x6=12 புள்ளிகள்)

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.